
www.newwisdomministries.com

# ஞான ஒலி



## திக்கற்றவர்க்கு தெய்வமே துணை



ஞானம் 07 – ஒலி 17 – 28.04.2024

# ஆசிரியர் பக்கம்



கருணை வடிவான அருள்நாதர் இயேசுவின் உறவுகளே நமது உயிரில் கலந்து இருக்கும் கருணையே நாம் அந்தக் கடவுளின் பிள்ளைகள் என்பதை நிரூபிக்கின்றது. நம்மையும் பிறரையும் உயிரில், உறவில் இணைந்திருக்கவும், சேர்ந்து வாழவும் அந்த கருணையே கடவுள் சக்தியாக இயக்குகின்றது. அந்த அன்பின் உருவாய், வாழ்வாய் நாம் விளங்க வாழ்த்துகின்றேன்.

நம்மைப் படைத்த இறைவன் நம்மைத் தனியே விட்டுவிடுவதில்லை. நம் வாழ்வை முழுமையாக வாழ்கின்றோமோ இல்லையோ. ஆனால் கடவுள் நம்மோடு என்று அழைக்கப்படும் இம்மானுவேல் என்றும் நம்மோடுதான் இருக்கின்றார். நாம் நம்மை அன்பு செய்வதைவிட, அவர் நம்மை அதிகமாய் அன்பு செய்கின்றார். அவரது அன்பு மாறாதது, பாரபட்சமில்லாதது. அவர் நம்மை அனாதையாய் விட்டுவிடுவதில்லை. ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதெல்லாம் நாம் படித்திருக்கின்றோம். ஆனால் இந்த அனுபவம் எல்லாருக்கும் கிடைத்துவிடுவதில்லை. யார் கடவுளோடு ஐக்கியமாக இருக்கின்றார்களோ அவர்கள் மட்டும்தான் இது சத்தியமான உண்மை என்பதையும், அதுதான் அவர்களின் நம்பிக்கைக்கு ஆணிவேரும், அடித்தளமுமாய் இருக்கின்றது என்பதை அறிவார்கள்.

வனாந்தரத்தில் பறவையால் விதைக்கப்பட்டு வளர்ந்து நிற்கும் ஒரு மரத்தைக் காப்பதும், அதற்குத் தேவையான நீரையும், மற்ற வளங்களையும் வழங்குபவர் கடவுள்தான் என்ற பேருண்மை, புற்களையும் அழகாலும், மருத்துவ குணத்தாலும் மேன்மையாக வைத்திருப்பவர் என்ற செய்தியும் நமக்கு வியப்பைத் தருகின்றது.

அந்தப் பேருண்மையை விளக்குகிறது இனிவரும் இந்த உண்மைச் சம்பவம்.

அந்தப் பெண்மணியின் பெயர் கருணா. சென்னையைச் சேர்ந்தவர், பார்வையற்றவர். தன் முயற்சியாலும், உறுதியாலும் ஆசிரியர் பட்டப்படிப்பை முடித்தார். ஆனால், அவர் பார்வைக் குறைபாடு உள்ளவர் என்பதால் அவருக்கு எந்தக் கல்வி நிறுவனமும் வேலை கொடுக்கவில்லை. இருந்தாலும், சோர்ந்து போகவில்லை. திருமண வயது. தன் திருமண வாழ்வை அமைத்துக் கொள்ள தன் துணையைத் தேடுகிறார். தேடுங்கள் கண்டடைவீர்கள் என்ற இயேசுபெருமானின் வார்த்தைகள் மனித குலத்திற்குமான அறிவுரை. ஆகவே கருணா தனக்கேற்ற ஒரு மனிதரைக் கண்டுபிடிக்கின்றார். அவரும் கண் பார்வையற்றவர். இருவரின் மனங்களும் அவற்றின் லட்சியங்களும், மனவுறுதிகளும் ஒன்று சேர்ந்தன...அதன் விளைவாக

இரண்டு குழந்தைகள் பிறந்தன. கடவுள் அனைத்து உயிர்களுக்கும் மாபெரும் ஆற்றல்களைக் கெட்டிக் கொடுத்திருக்கின்றார். யார் உதவி இல்லை என்றாலும், கடவுளின் கருணை அனைவரையும் வாழ வைக்கின்றது.

இருவருக்கும் வேலையில்லை என்று வருந்தாமல், இருவரும் சேர்ந்து சென்னையில் ஓர் இரயில் நிலையத்தின் முன் பாப்கார்ன், மிட்டாய் போன்றவற்றை விற்று பிழைக்கின்றார்கள். அதே சமயத்தில், கருணா அந்தக் கடை ஓரத்திலேயே தன் பிள்ளைகளுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டும் இருந்தார். கடவுளின் கருணையால் அந்த இரண்டு குழந்தைகளுக்கும் கண்கள் நன்றாக இருந்தன.

தினமும் அந்த இரயில் நிலையத்துக்கு வந்துபோகும் மாற்றம் எனும் தொண்டு நிறுவனத்தின் நிர்வாகி திரு.சுஜித்குமார் என்பவர் அந்தப் பெண்மணியின் திறமையையும், அவரின் குழந்தைகளுக்குப் அவர் பாடம் எடுக்கும் விதத்தைப் பார்த்து அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தார். ஆகவே அவர் மஹிந்திரா கல்வி குழுமத்தின் நிறுவனர்களைச் சந்தித்து கருணாவின் திறமையைப் பற்றியும் அவரின் தற்போதைய நிலையையும் எடுத்துச் சொன்னார். அதன்படி அந்த நிறுவனம் கருணாவை நேர்முகத் தேர்வுக்கு தனது சான்றிதழ்களோடு அழைத்தது. அந்தத் தேர்வில் அவர் மிகவும் தகுதியானவர் என்று கண்டு, அவரைத் தன் பள்ளியில் ஆசிரியப் பணியில் அமர்த்தியதோடு அவரின் இரண்டு குழந்தைகளையும் தங்கள் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்திருக்கின்றார்கள்.

அவரின் திறமையான கற்பிக்குத் திறனால், பள்ளிக் குழந்தைகளின் கல்வி மேம்பட்டிருக்கின்றது என்று அனைத்துப் பெற்றோர்களும் பாராட்டுகின்றார்கள். மஹிந்திரா கல்வி நிறுவனமும் தங்கள் பள்ளியில் ஒரு சிறந்த ஆசிரிருக்கு வேலை கொடுத்ததுபற்றி அவரைக் குறித்து பெருமை கொள்கின்றது.

தற்போது கருணா, முனைவர் பட்டம் பெறுவதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்.

பார்வையுள்ளவர், பார்வையற்றவர் என்ற வித்தியாசம், தனிமனிதரின் மனநிலையையும், வாழ்வதற்காக ஒருவர் எடுக்கும் முயற்சியில்தான் உள்ளது. அந்த வகையில், பார்வை இருந்தும் வாழத் தெரியாதவர்களைவிட, கருணாவைப் போன்றவர்கள் எந்தக் குறைபாடும் இல்லாதவர்கள். அவர்கள்தான் வாழ்வின் முழுமையான வெற்றி பெற்றவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

எல்லாம் இருந்தும், எல்லாவற்றிலும் குறைகளையும், குற்றங்களையும் பார்த்து எதுவும் சரியில்லை என்பவர்கள்தான் ஊனமானவர்கள் என்பதுதான் உண்மை.

மனிதனுக்கு ஒன்று குறையாய் இருந்தால், அதற்கு ஈடாக இரட்டிப்பான சிறப்பான ஆற்றல்களை இறைவன் அவர்களுக்கு அளிக்கின்றார். அதனை அவர்ககள் கண்டுகொண்டு அதனால், அவர்கள் வாழ்வில் வெற்றி பெறவும் இறைவனின் துணை அவர்களுக்கு அபரிமிதமாக உள்ளது. கடவுளின் பேரருள் அவர்களுக்கு என்று ஆதராவய் உள்ளது.

அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்து, அவர்கள் மூலமாக மற்றவருக்குத் தன்னம்பிக்கையை கொடுப்பதும் இறைத் திட்டம்தான்.



# விவிலியம் அறிவோம்




## எரிகோநகரைக் கைப்பற்றுதல்

எரிகோ நகரம்பற்றிய முரண்பாடுகள் நிறைந்த செய்திகள் பல உள்ளன. எரிகோ நகரம் கிறிஸ்துவுக்குமுன் ஏறக்குறைய ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட நகரமாக, உலகிலேயே முதல்முதலில் கட்டியெழுப்பப்பட்ட, பழமைவாய்ந்த நகரமாகப் பலரும் கருதுகின்றனர். அகழ்வராய்ச்சி முடிவுகளின்படி கி.மு. 1550வது ஆண்டளவில் எரிகோ நகரம் நிலநடுக்கம் மற்றும் நெருப்பினால் முழுவதுமாக அழிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. அதன்பின் அந்நகரம் பெரிய அளவில் கட்டியெழுப்பப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை. ஆனால் கி.மு. 9 வது நூற்றாண்டுவரை அங்கொன்றும் இங்கொன்றுமாக குடியிருப்புகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. கி.மு. 12 ஆம் நூற்றாண்டளவில் பெரிய கோட்டைச் சுவர்களைக் கொண்ட நகரமாக எரிகோ இருந்திருக்கிறது. எரிகோ நகரம் உயரமான இரட்டைச் சுவர்களைக் கொண்ட கோட்டையாக இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. யோசுவா கைப்பற்றியதாக கூறப்படுகின்ற எரிகோ நகரத்திற்கும் அகழ்வாராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்ற எரிகோ நகரத்திற்கும் பல முரண்பாடுகள் உள்ளன. எனவே அகழ்வாராய்ச்சியாளர்கள் காட்டுகின்ற எரிகோ நகரை விட்டுவிட்டு யோசுவா நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள எரிகோ நகரத்தைப் பற்றி நாம் சிந்திப்போம்.

எரிகோ நகரின் கோட்டைச் சுவர்கள் வலிமையானதாக இருந்தன. இஸ்ரயேல் மக்கள் மீது கொண்ட அச்சத்தினால் எரிகோவின் மக்கள் கோட்டைக் கதவுகளை இறுக்கமாக அடைத்து உள்ளே தங்கியிருந்தனர். எரிகோவின் அரசனுக்கு இஸ்ரயேலரின் வரவு ஏற்கனவே தெரிந்திருந்ததால் எரிகோவைப் பாதுகாப்பதற்கு எல்லா முயற்சிகளையும் அவன் செய்திருந்தான். கடவுளின் ஆற்றலை எந்தக் கோட்டையும் கட்டுப்படுத்த முடியாது. ஆண்டவர் யோசுவாவிடம், பார்! எரிகோவையும் அதன் மன்னனையும் இதன் வலிமைமிக்க போர்வீரர்களையும் உன் கையில் ஒப்படைத்துவிட்டேன் எனக் கூறியிருந்தார். எரிகோவை வெற்றிகொள்வதற்குக் கடவுள் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். யோசுவாவிடம் அதைக் கூறுகின்றார். கடவுள் யோசுவாவுக்குக் கூறிய திட்டத்தை யோசுவா குருக்களுக்கும் மக்களுக்கும் கூறுகின்றார். கடவுளுடைய திட்டப்படி அவர்கள் செயல்பட்டபோது எரிகோ நகரம் கைப்பற்றப்படுகிறது. கடவுளின் திட்டப்படி இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஆறு நாட்களுக்கு எரிகோவை ஒருமுறை மௌனமாகச் சுற்றிவர வேண்டும். ஏழாவது நாள் ஏழுமுறை மௌனமாகச்

சுற்றிவர வேண்டும். உடன்படிக்கைப் பேழையைச் சுமந்துகொண்டு குருக்கள் மக்களின்முன் செல்லவேண்டும். உடன்படிக்கைப் பேழையின் புனிதத்தைக் காப்பதற்காகத்தான் அதைக் குருக்கள் சுமந்து செல்கின்றனர். அவர்களுக்குமுன் ஏழு குருக்கள் எக்காளங்களை முழங்கிச் செல்லவேண்டும். ஏழாம் நாள் ஏழாவது சுற்றின் போது குருக்களுடைய எக்காளத்தின் நீண்ட முழக்கத்தை நீங்கள் கேட்டவுடன், நீங்கள் அனைவரும் பேரொலி எழுப்புங்கள். அப்பொழுது நகரின் மதில்கள் இடிந்துவிழும். உடனே மக்கள் அவரவர்களுக்கு முன்னே உள்ள பகுதிக்கு ஏறிச்செல்ல வேண்டும் என ஆண்டவர் யோசுவாவுக்கு கூறுகின்றார்.

கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து செயல்பட்டால் எந்தத் தடைகளையும் தகர்த்துவிடலாம். எரிகோவைக் கைப்பற்றுவதற்கு இஸ்ரயேல் மக்கள் கடவுளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். யோசுவா குருக்களுக்கும் மக்களுக்கும் கட்டளைகள் தருகின்றார். குருக்கள் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்து செல்கின்றனர். அவர்களுக்குமுன் ஏழு குருக்கள் எக்காளங்களை முழங்கிச் செல்கின்றனர். முன்னணி வீரர்களும் பின்னணி வீரர்களும் உடன்படிக்கைப் பேழைக்கு முன்னும் பின்னும் நடந்து வருகின்றனர். மக்கள் முன்னால் நடக்கின்றனர். ஆறு நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு தடவை நகரை வலம் வருகின்றனர். அதன்பின் தங்குவதற்குச் செல்கின்றனர். ஏழாம் நாள் ஏழுமுறை நகரைச் சுற்றி வருகின்றனர். ஏழாவது முறை நகரைச் சுற்றியபோது மக்கள் பேரொலி எழுப்புகின்றனர். எரிகோவின் மதில்கள் இடிந்து விழுகின்றன. இஸ்ரயேல் மக்கள் நகருக்குள் புகுந்து அங்கு வாழ்ந்தவர்களை வெட்டி வீழ்த்துகின்றனர். நகரில் உள்ளவை அனைத்தையும் அழிக்கின்றனர். எரிகோ நகரைத் தங்கள் வசம் கொண்டுவருகின்றனர். இந்தப் பிரிவில் வருகின்ற மூன்று முக்கிய கருத்துக்களை நாம் ஆழமாகச் சிந்திப்போம். அவை முறையே 1) எரிகோநகரைக் கைப்பற்றப் பின்பற்றுகின்ற முயற்சிகள் ஏன் ஒரு வழிபாடுபோல் உள்ளது. 2) விலைமாது இராகாபும் அவளுடைய குடும்பத்தினரும் காப்பாற்றப்படுவதன் பின்னணி என்ன? 3) அழிவிற்குரியவை பற்றிய கருத்து.

முதலாவதாக, எரிகோவைக் கைப்பற்றும் நிகழ்வு ஏன் ஒரு வழிபாடுபோல் அமைந்துள்ளது என்பதைப்பற்றிச் சிந்திப்போம். உடன்படிக்கைப் பேழை (6:6); கொம்புகளால் ஆன எக்காளங்களை ஏந்திச்செல்லும் குருக்கள் (6:8), நகர மதில்களைச் சுற்றிய பவனி (6:7), ஏழு என்ற முழுமையான எண்ணின் பயன்பாடு (6:13) மற்றும் மக்கள் எழுப்பும் பேரொலி (6:20)ஆகிய அனைத்தும் வழிபாட்டு சிறப்பம்சங்களாக உள்ளன. எரிகோவைக் கைப்பற்றும் நிகழ்வு ஆண்டவரின் படைத்தலைவர் யோசுவாவுக்குக் காட்சியளிப்பதுடன் தொடங்குகிறது. வழக்கமாக ஒரு நகரைக் கைப்பற்றுவதற்குப் போர் புரிவதைப்போல் இங்கே போர் புரியவில்லை. எந்த இராணுவத் தலையீடும் இன்றி எரிகோ நகர் முற்றுகையிடப்படுகிறது. ஏழு நாள்கள் நகரைச் சுற்றி வலம் வருகின்றனர். விவிலியத்தில் ஏழு என்ற எண் பல இடங்களில் முழுமையைக் குறிக்கும் அடையாள எண்ணாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எரிகோ நகரின் மதில்கள் உடைந்து விழுவதை மக்கள் பார்க்கிறார்கள். நகருக்குள் நுழைந்து

நகரைக் கைப்பற்றுகிறார்கள். இஸ்ரயேல் மக்கள் நம்பிக்கையோடு இங்கே செயல்படுகிறார்கள். மக்கள் எழுப்பிய பேரொலியினால் அவர்கள் வெற்றி பெறவில்லை மாறாக கடவுள் அவர்களுக்கு வெற்றியைத் தந்தார் என்று நம்பினார்கள். ஆண்டவர் நகரை உங்களிடம் ஒப்படைத்துவிட்டார் என யோசுவா கூறுகிறார். கடவுளின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து மக்கள் செயல்பட்டதால் வெற்றி பெறுகிறார்கள். இஸ்ரயேல் மக்களில் யாரும் இறக்கவில்லை, அவர்களுக்கு எந்தப் பொருள் சேதமும் ஏற்படவில்லை. யோசுவா 6வது பிரிவு இணைச்சட்டம் ஆசிரியர்களின் தொகுப்பு. அவர்களின் நோக்கம் நாடு கடத்தப்பட்டவர்களாகப் புலம்பெயர்ந்து வாழும் மக்களிடம் எரிகோவின் வெற்றிக்குக் கடவுளே காரணம், அவர் வல்லமை வாய்ந்த கடவுள் எனக் கூறுவதுதான். வல்லமைவாய்ந்த கடவுள் எரிகோவைக் கைப்பற்ற உதவியதுபோல் புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கும் உதவுவார் என்ற கருத்து இங்கே கூறப்படுகிறது. மேலும் கானான் நாட்டில் அடைகின்ற முதல் வெற்றி கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாகக் காட்டப்படுகிறது.

இரண்டாவதாக, விலைமாதுவான இராகாபும் அவருடைய குடும்பத்தினரும் காப்பாற்றப்படுகின்றனர். யோசுவா 2 வது பிரிவில் விலைமாதுவான இராகாபு யோசுவாவால் அனுப்பப்பட்ட ஒற்றர்களைக் காப்பாற்றினார், அவர்கள் பாதுகாப்புடன் செல்வதற்கு வழிவகுத்தார் எனப் பார்க்கிறோம். யோசுவாவால் அனுப்பப்பட்ட ஒற்றர்களை இராகாபு காப்பாற்றியபோது, எரிகோ நகரை அவர்கள் முற்றுகையிட்டு கைப்பற்றும்போது, தன்னையும் தன் குடும்பத்தினரையும் பாதுகாக்க வேண்டும் என அவர்களிடம் ஆணையிட்டு உறுதிமொழி கேட்கின்றார். ஒற்றர்களும் இராகாபையும் அவரது குடும்பத்தினரையும் காப்பாற்றுவதாக உறுதிமொழி தருகின்றனர். அதன் விளைவாகத்தான் எரிகோ நகர் கைப்பற்றப்பட்டபோது யோசுவா ஒற்றர்களாக அனுப்பப்பட்டவர்களிடம் இராகாபையும் அவரது குடும்பத்தினரையும் காப்பாற்றுவதற்குக் கட்டளையிடுகின்றார். இராகாபும் அவரது குடும்பத்தினரும் காப்பாற்றப்பட்டு பாளையத்திற்கு வெளியே வைக்கப்படுகின்றனர். அவர்கள் தூய்மையானவர்களாக இஸ்ரயேல் மக்களுடன் இணையவேண்டும் என்பதற்காகத்தான் பாளையத்திற்கு வெளியே வைக்கப்படுகின்றனர். அது ஒரு தற்காலிக நிலைமை. அவர் இஸ்ரயேல் நடுவில் இன்றும் வாழ்கின்றார் என்னும் சொற்றொடர் இராகாபும் அவரது குடும்பமும் இஸ்ரயேல் மக்களுடன் இணைக்கப்பட்டனர் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. இயேசுவின் மூதாதையர் பட்டியலில் இராகாபின் பெயரும் குறிக்கப்படுவதிலிருந்து இராகாபு குடும்பம் இஸ்ரயேல் மக்கள் நடுவில் மதிப்பிற்குரிய ஒரு குடும்பமாக, இஸ்ரயேல் மக்களுடன் இணைந்து வாழ்ந்த குடும்பமாக இருந்தது என்பது தெரிகிறது. இராகாபு கதை ஒரு காரணக்கதை. இக்கதை பிற்காலத்தில் இஸ்ரயேல் மக்கள் நடுவில் பிறஇனத்தவர் வாழ்வதற்கு அனுமதித்ததை சுட்டிக்காட்டுவதாகவும் உள்ளது.

மூன்றாவதாக. இப்பிரிவில் வருகின்ற அழிவிற்குரியவை என்ற சிறப்புக் கருத்து முக்கியமானது. யோசுவா போர் வீரர்களிடம், நீங்கள் அழிந்து போகாதபடி கைப்பற்றிய

பொருள்களிலிருந்து விலகி நில்லுங்கள். நீங்கள் அழிவுக்குரியவற்றிலிருந்து எதையாவது கவர்ந்தால், இஸ்ரயேலின் பாளையத்தையும் அழிவுக்குரியதாக்கிக் கலங்கச் செய்வீர்கள். எல்லா வெள்ளியும் பொன்னும் வெண்கல இரும்புப் பாத்திரங்களும் ஆண்டவருக்குப் புனிதமானவை எனவே ஆண்டவரின் கருவூலத்தைச் சேரும் எனக் கூறுகின்றார். எபிரேய மொழியில் கேரம் *(herem)* என்ற சொல்லைத்தான் அழிவுக்குரியவை என நாம் தமிழிலே மொழிபெயர்க்கிறோம். இக்கருத்து விவிலியத்தின் பல நூல்களில் வருகின்றன. குறிப்பாக இணைச்சட்டம் நூலில் முதல்முதலாக ஒரு கட்டளையாகக் கொடுக்கப்படுகின்றது. கேரம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது கூறப்படுகின்றது. யோசுவா நூலில் கேரம் எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அழிவுக்குரியவை என்ற கருத்தின்படி ஒரு நகரைக் கைப்பற்றும்போது அந்நகரில் வாழுகின்ற மனிதர்கள்,கால்நடைகள் என அனைத்து உயிரினங்களும் அழிவுக்குட்படுத்தப்பட வேண்டும். அந்நகரிலுள்ள பொருள்கள் அனைத்தும் தீக்கிரையாக்கப்பட வேண்டும். போர் வீரர்கள் அங்குள்ள பொருள்களில் எதையும் கொள்ளைப் பொருளாக எடுக்கக்கூடாது. அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். இதை எப்படிப் புரிந்து கொள்வது?

அழிவுக்குரியவை என்ற கருத்தின்படி அந்தகரில் உள்ளவை அனைத்தும் ஆண்டவருக்குச் சொந்தமானவை. ஆண்டவர் போர் வீரராகவும் வெற்றியைப் பெற்றுத் தருபவராகவும் இங்கே சித்தரிக்கப்படுகின்றார். எனவே நகரிலிருந்து வருகின்ற கொள்ளைப் பொருள்கள் அனைத்தும் ஆண்டவருக்குரியவை. அவை புனிதமானவை. அவற்றை அபகரிப்பது கடவுளுக்குரியவற்றை அபகரிப்பதாகும். அவற்றை அழிப்பது கடவுளைத் தொழுவதாகப் பார்க்கப்படுகிறது. அழிவுக்குரியவை என்ற கருத்து இன்றைய வாசகர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருக்கலாம். ஆனால் இது தீமையை அழிக்கும் ஒரு நிகழ்வு. தீமை ஆண்டவருக்கு எதிரானது. தீமை அழிக்கப்பட வேண்டும் அல்லது கடவுளின் மக்களிடமிருந்து தூரத்தில் வைக்கப்பட வேண்டும். தீமை கடவுளின் மக்களைப் பாதிக்கக்கூடாது. தீமை தொற்றுநோயைப் போன்றது, அது பரவுவதற்கு முன்பே முழுவதுமாக அழிக்கப்பட வேண்டும் (இச 7:1-4). இது மனிதர்கள், கால்நடைகள் மற்றும் பொருள்களை உள்ளடக்கியதாக இருக்கிறது (இச 13:13-19). கடவுளின் பார்வையில் கானான் நாடு தீமையின் விளைநிலமாகவே பார்க்கப்படுகிறது. கானான் நாட்டில் முதல்முதலாகக் கைப்பற்றப்படும் எரிகோ நகரை முழுவதுமாக அழிப்பது கானான் நாட்டை அழிப்பதற்கு ஓர் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. எரிகோவிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களில் பொன், வெள்ளிபோன்ற விலையுயர்ந்த பொருள்கள் ஆண்டவரின் கருவூலத்தில் சேமிக்கப்படுகின்றன. இது பிற்காலத்தில் கட்டப்படவிருக்கும் கோவிலின் பயன்பாட்டிற்காகச் செய்யப்படுகிறது. எரிகோ நகரை மீண்டும் கட்டியெழுப்புபவன் சபிக்கப்பட்டவன் என்ற கருத்து ஆகாபு அரசன் இஸ்ரயேலை ஆண்ட காலத்தில் நடக்கும் நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுகிறது (6:26 1 அரசர் 16:34).

பயணம் தொடரும்,
அருட்பணி முனைவர் ஆ. அலெக்ஸ்ஊஆகு

# ஞாயிறு மறையுரை





அருட்பணி.ஜஸ்டின் சேவியர் ராஜ்
புனித.திருக்குடும்ப ஆலயம்
பெருந்துறை. கோவை மறைமாவட்டம்

**பாஸ்கா 5ம் ஞாயிறு**
**28.04.2024**

**திருப்பலி வாசகங்கள்**
திருத்தூதர் பணிகள் 9/26-31
1 யோவான் 3/18-24
லூக்கா 15/1-8

## இணைந்திரு...இணக்கமாயிரு


நாவலர் சங்கீதத்தில் மிகவும் கெட்டிக்காரர். தும்புரு முனிவரும் மிகவும் கெட்டிக்காரர். ஆனால் இரண்டுபேரில் யார் பெரிய கெட்டிக்காரர் என்று சண்டை வந்தது. கடவுளிடம் பஞ்சாயத்துக்குச் சென்றார்கள். இரண்டு பேரும் ஒரு குறிப்பிட்ட விவசாயிடம் போங்கள் யார் பெரிய கெட்டிக்காரர் என்று அவர் சொல்வார் என்றார் கடவுள். அந்த ஏழை விவசாயிடம் சென்றபோது கடவுள் சொன்ன அனைத்தையும் கேட்டுவிட்டு அவர் முழித்தார். நமக்கு அவ்வளவு சங்கீத ஞானம் இல்லையே என்று யோசித்துவிட்டு, எதுக்கும் நான் முதலில் எனக்கு பாட்டு எப்படி வருதுன்னு பாடிப்பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு ஒரு பாறைமேல் உட்கார்ந்து தொடையைத்தட்டிப் பாட ஆரம்பித்தார். உட்கார்ந்திருந்த பாறை உருகி வழிய ஆரம்பித்ததும் அந்த விவசாயி பாறைமேல் வீணையை வைத்துவிட்டு யோசனை செய்தார். பாட்டை நிறுத்தியதால் பாறை பழையபடி இறுகி வீணை பாறையோடு ஒட்டிக கொண்டது. இப்பொழுது அந்த விவசாயி இரண்டு பேரில் யார் பழையபடி பாறையை உருக வைத்து வீணையை எடுக்குறீங்களோ அவர்தான் கெட்டிக்காரர் என்றார். நாவலரும், தும்புருவும் பாடிப்பாடிக் களைத்தனர். பாறை உருகவில்லை, எங்க இரண்டு பேருக்கும் நாங்கள் கெட்டிக்காரர் என்று நினைப்பு வந்ததே முட்டாள்தனம் என்றபடி புறப்பட்டார்கள். அதனால் நாம்தான் லார்ட் லபக்தாஸ் என்ற எண்ணம் இல்லாமல், அடக்கமாக இருப்பதுதான் உண்மையான கெட்டிக்காரத்தனம்.

இன்று நாம் பாஸ்கா ஐந்தாம் வாரத்தைப் சிறப்பிக்கின்றோம். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதையெல்லாம் நான் உங்களுக்குத் தருவேன் என்ற வாக்குறுதியை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இன்று நமக்குத்

தருகிறார். அதாவது நாம் ஆண்டவரோடு இணைது இருக்கும் போது, நாம் கேட்பதையெல்லாம் ஆண்டவர் நமக்குக் கொடுப்பார். நம் முதல் பெற்றோர் ஆதாமும் ஏவாளும் கடவுளோடு இணைந்திருந்தபோது அவர்களது வாழ்வு விண்ணக வாழ்வைப்போன்று இருந்தது. ஆனால் எப்போது சுயநலத்தால் பாவம் செய்தார்களோ, அப்போது கடவுள் அருள் நிலையிலிருந்து பிரிக்கப்பட்டு புறம்பே தள்ளப்பட்டார்கள்.

ஆண்டவர் இயேசுவின் திருத்தூதர்களும், புனிதர்களும் ஆண்டவரோடு இணைந்திருந்தார்கள். நாம் கடவுளோடு இணைந்திருக்கின்றபோது, நமது வாழ்வும் விண்ணக வாழ்வைப்போல இருக்கும் என்பதை இன்றைய வார்த்தை வழிபாடு அறிவுறுத்துகின்றது. சவுல் மனந்திரும்பியபின் சீடர்களும் ஏனைய மக்களும் அவரை எவ்வாறு ஏற்றுக்கொண்டனர் என்பதை இன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்துரைக்கின்றது. சவுலை ஏற்றுக்கொள்ள அனைவரும் தயங்கினர். காரணம் அவரைப்பற்றிய முன்சார்பு எண்ணம். அவர் கிறிஸ்தவர்களைக் கொன்றுவிடுவார் என்ற அச்சம். அதனால் அந்த குழப்பதைப்போக்க பர்னபா என்ற இடைநிலையாளர் நேர்மையாகச் செயல்பட்டு உறவை ஏற்படுத்துகிறார். நாமும் நம்முடைய முன்சார்பு எண்ணங்களோடு மற்றவர்களை நடத்தும்போது மனிதத்தன்மையிலிருந்து தடம் புரண்டுபோகிறோம். உண்மையை உணர்ந்தவர்கள் நடுநிலையோடு உறவை வளர்க்க தடையாக இருக்கும்போது கடவுளின் சினம் நம்மேல் விழும். இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித அருளப்பர் கூறுவதுபோல, நமது அன்பும், நம்பிக்கையும செயலில் வெளிப்பட வேண்டும். உறவை வளர்க்கின்றவர்களாக வாழ வேண்டும். நாம் கடவுளின் கட்டளைகளை கடைப்பிடிக்கும்போது நாம் அவருள்ளும், அவர் நம்முள்ளும் நிலைத்திருப்பதாக கூறுகிறார். இஸ்ரயோல் மக்களுடன் நெருங்கிய தொடர்புடைது திராட்சைக்கொடி அதைஅவர்கள் வளர்த்தார்கள். அதனால் வாழ்ந்தார்கள். எனவே அதையே உவமையாக்கி, உண்மைத் திராட்சைக்கொடி பற்றி பேசுகிறார் இயேசு. கிளைகளை கொடியோட இணைந்திருக்கும்போதுதான் வாழ முடியும, பயன்தர முடியும. பலன் தரவில்லை என்றால் வெட்டப்பட்டுவிடுவோம். நாம் கடவுளோடு இருந்தால் மட்டுமே வாழ முடியும்.

அந்த வாழ்வை மற்றவர்களுக்கும் கொடுக்க முடியும். எனவே வாழ்கின்றவர்களாக மற்றவர்களை வாழவைப்பவர்களாக வாழ்வோம். ஆமென்.




# பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

தி.ப. 9 : 26–31, 1யோவா. 3 : 18–24, யோவா. 15 : 1–8

**28-04-2024**



பா. சேவியர்
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

திருமுழுக்கின் வழியாக இயேசுவின் கிளைகளாக அவருடன் ஒன்றித்து கனி தரும் வாழ்வு வாழ வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நாமனைவரும் இயேசுவைச் சார்ந்து ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழவும், உயிர்த்த ஆண்டவர் இயேசுவில் நிலைத்திருந்து இறைவனுக்கும் திருச்சபைக்கும் மிகுந்த கனி தருபவர்களாக வாழவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

மழை, மேகத்தைச் சார்ந்திருக்கிறது. நீர், நிலத்தைச் சார்ந்திருக்கிறது. மலர், ஒளியைச் சார்ந்திருக்கிறது. நிலவு, வானத்தைச் சார்ந்திருக்கிறது. கொடி, கொம்பைச் சார்ந்திருக்கிறது. நாம், இயேசுவைச் சார்ந்திருக்கிறோம்.

நாம் இயேசுவோடு இணைந்திருந்தால் மட்டுமே பலன் அளிக்க முடியும். இயேசுவோடு ஒன்றித்து வாழ்வதுமட்டுமல்ல, நம்மோடு வாழ்கின்ற ஒவ்வொருவரையும் இயேசுவாக பாவித்து, அவர்களோடும் ஒன்றித்து ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற கருத்துக்களை நம் நெஞ்சங்களில் விதைக்கிறது இன்றைய வழிபாடு.

நாம் இயேசு என்னும் திராட்சைக் கொடியின் கிளைகள் என்பதை உணர்ந்து, இயேசு நம்முடனும் நாம் அவருடனும் இணைந்து கனி தரும் வாழ்வு வாழ இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

சவுல் பவுலாக மனம் மாறிய பின்னர் முதன் முதலாக எருசலேம் நகருக்கு வருகிறார். அங்கு அவர் சந்திக்கும் அனுபவங்களை விளக்குகிறது இன்றைய முதல் வாசகம். தூய பவுல் மற்ற சீடர்களுடன் இணைந்து இயேசுவுக்கு சாட்சியம் பகர்வதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மீது விசுவாசமும், ஒருவர் மீது ஒருவர் அன்பும் கொண்டு வாழ வேண்டும் என்பதை இயேசுவின் அன்புச் சீடரான யோவான் இன்றைய இரண்டாம் வாசகம் வழியே வலியுறுத்துகிறார். கிறிஸ்து நம்மை அன்பு செய்ததுபோல் நாமும் நமக்கு அடுத்திருப்போரை அன்பு செய்து வாழ அழைக்கும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

## மன்றாட்டுகள்

1) நம்பிக்கையின் நாயகனே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்தந்தையர் மற்றும் அருட்கன்னியர் அனைவரும், மக்களை இருளினின்று உமது வியத்தகு ஒளிக்கு அழைத்து வரும் மேன்மை மிக்கப் பணிகளை சிறப்பு டன் ஆற்றிடவும், அத்திருப்பணிகளில் அவர்கள் என்றும் மூலைக் கல்லாய் இருந்திடவும் வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) வழியாகவும் வாழ்வாகவும் உண்மையாவும் விளங்குகின்ற அன்பு இறைவா, உம் திருமகன் கிறிஸ்துவின் சீடர்களாகிய நாங்கள் அவரது அன்பில் நிலைத்திடவும், அவரது வார்த்தைகள் எம்முள் நிலைத்திடவும், அதன் மூலம் எங்கள் வாழ்க்கை மிகுந்த கனி தரும் வாழ்க்கையாக அமைந்திடவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) இருக்கின்றவராக இருக்கின்ற அன்பு இறைவா, எம் பிள்ளைகள் பள்ளிப் படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு கல்லூரிப் படிப்பைத் தொடங்கும் நிலையிலும், கல்லூரிப் படிப்பை முடித்தவர்கள் தங்கள் எதிர் காலத்தைத் தீர்மானிக்கும் வேலை வாய்ப்பைத் தேடும் நிலையிலும் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் உமது ஆசீரும் அருளும் அவர்களை ஒளிமயமான உண்மையான வாழ்வுக்கு அழைத்துச் செல்ல உதவ வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) தாயும் தந்தையுமான இறைவா, எமது நாட்டை வழிநடத்தும் அரசியல் தலைவர்களையும் அதிகாரி களையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் நீதி நெறி தவறாமல், மக்களுக்கு சரியானதையும் நன்மை யானதையும் செய்து நாட்டையும் மக்களையும் வளமோடும் நலமோடும் வாழ வைக்க வேண்டிய உண்மை யான இறை ஞானத்தை அவர்கள் மேல் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



தன் மனதை மாற்றத் தெரியாதவர்
வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது.

துணிந்தவருக்குத்தான் சுதந்திரம் கிடைக்கும்.
சுதந்திரம் இருக்கும் இடத்தில்தான் மகிழ்ச்சி பிறக்கும்.

உடையாதவரைதான் எதையும் ரசிக்கலாம்.
உடைந்ததை ஒட்டி வைக்கலாம்.
அதை சகித்துக் கொள்ளலாம், ஆனால் ரசிக்க முடியாது.

நீங்கள் மற்வருக்குச் செய்யும் நல்ல காரியங்களை
நீங்கள் அதை நிறுத்தும்வரை உணரவே மாட்டார்கள்.

ஒருவரின் வார்த்தைகள் அவரின் மனதை வெளிப்படுத்துகின்றன.
ஒருவரின் செயல்கள் அவரின் இதயத்தை வெளிப்படுத்துகின்றன.

புரிந்துகொள்ள மறுப்பவர்களுக்கு எந்தவித விளக்கங்களும்
சான்றுகளும் பலன்தராது. – மார்க் ட்வெய்ன்

அனுபவத்திடம் அறிவுரையைக் கேட்டுக்கொள்ளுங்கள்.
கற்றதைவிடப் பட்டதை எடுத்துச் சொல்வார்கள்.

வாழ்வில் உயர நினைப்பவர்கள் தினமும் நல்லவற்றைக்
கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். – ஜிம் ரோன்.

போராட்டங்களால்தான் ஒருவர்
தன் வலிமையைப் பெற்றுக் கொள்கிறார். –சின்மண்ட ரோன்

நம்மைப்பற்றி முதுகுக்குப் பின்னால் பேசுபவர்கள்
நம் காதுக்குக் கேட்கிற மாதிரிகூட சத்தமாகப் பேசுவதில்லை
என்பதில் அடங்கியிருக்கிறது நம் வெற்றி.

உன் மனம் வலிக்கும்போது சிரி
பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்க வை. – சார்லி சாப்லின்

# தமிழே..அமுதே..எனதுயிரே






ஒரு மொழி வளம் பெற வளர வேண்டும் எனில் அம்மொழி பேசும் மக்கள் அம்மொழியிடத்தில் மிகுந்த பற்று உடையவராய் இருத்தல் வேண்டும். அங்ஙனம் பற்று இல்லாத மக்களை உடைய மொழி எதுவும் வளம் பெற வளராது. உயரின மக்களுக்குரிய மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று என்ற மூன்றினுள் மொழிப்பற்றே ஏனை இரண்டிற்கும் ஏதுவாகும்.

தாய்மொழி பற்றில்லாத ஒருவன் மக்கள் பதராவான். பழந்தமிழ் மக்கள் மிக்க தாய் மொழிப் பற்றுடையராய் இருந்து வந்தனர். செல்வர்களும், குறுநில மன்னர்களும், பெருநில மன்னர்களும் தமிழ்ப் பாடல் பெறாததை மிக மிக இழிவாகக் கருதி வந்தனர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் மாங்குடி மருதனார் முதலிய புலவர்கள் எனது நாட்டைப் பாடாது நீக்குக என்று வஞ்சினம் கூறியது தம் முதிர்ந்த தாய்மொழிப் பற்றினால்தான். ஒருவர் எய்தும் புகழில் புலவர் பாடும் புகழே தலையாய புகழெனா மதிக்கப்பட்டு வந்தது அன்று. புலவர் பாடும் புகழுடையோர் என்பது ஒருவரது புகழின் எல்லையைக் குறிக்கும் மரபு தொடராகும். ஒரு பழந்தமிழ் குடியை குறிப்பிடும் போது, புலவர் பாடும் புகழோடு வாழ்ந்த குடி என்பது வழக்கம்.

அதியமான் நெடுமான் அஞ்சி, தான் அரிதிற் பெற்ற நெல்லிக்கனியை, உண்டவர் நெடுநாள் உடல் நலத்தோடு வாழ்வார் என்பதை அறிந்திருந்தும் அதை ஔவைக்கு கொடுத்தது ஆன்ற தமிழ் மொழிப்பற்றினால்தான். ஔவை நெடுநாள் உடல் நலத்துடன் இருந்து தமிழ் வளர்க்க வேண்டும் என்பது தானே அவன் நெல்லிக்கனி கொடுத்ததன் குறிக்கோள்.

வழி நடந்து வந்த அயர்ச்சியால் அறியாது முரசு கட்டிலில் ஏறிப் படுத்துறங்கிய மோசிகீரனார் என்னும் புலவரை வாள் கொண்டு இரு துண்டாக்கும் தன் கையால் அவர் தூங்கி எழும்வரை கவரிக்கொண்டு வீசிய சேரமான் பெருஞ்சேரலிரும் பொறையின் தமிழ்ப் பற்றுக்கு எதனையும் உவமை கூற இயலாது.

வாழ்க தமிழ்!

லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியர்.



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 93

முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்
இன்சொலி னதே அறம்

## குறள் விளக்கம்

முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

## சிந்தனை

ஒருவருடன் உரையாடுகின்றபொழுது அகமும் புறமும் ஒன்றி இருக்கவேண்டும். ஓர் ஞானியிடம் ஒருவர் சீடனாயிருக்கச் சென்றார். சில மாதங்கள் கழித்து சீடனுக்கு சந்தேகம். குருவிடம் கேட்டான். குருவே நான் உண்பதைத்தான் நீங்களும் உண்கிறீர்கள். நான் செய்கின்ற வேலைகளைத்தான் நீங்களும் செய்கின்றீர்கள். நான் உறங்கும் வேளைகளில் நீங்களும் உறங்குகிறீர்கள். உங்களுக்கும் எனக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் நீங்கள் ஏன் குருவாக இருக்கின்றீர்கள் எனக்குப் புரியவில்லை என்றாராம். அப்போது குரு அவரிடம் இப்போது நான் உம்மிடம் முழுமையாக பேசிக்கொண்டிருக்கிறேன். நீ என்னிடம் முழுமையாகப் பேசிக் கொண்டிருக்கிறாயா? என்று கேட்டாராம். ஆம் நாம் பெரும்பாலும் ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது நமது மனம் உள்ளம் இன்னொரு காரியத்தில் சிந்தித்துக் கொண்டிருக்கும். ஒருவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே கையிலுள்ள தொலைபேசியை பயன்படுத்துதல். சிலர் கணக்கு ஏதாவது போட்டுக்கொண்டே பேசிக்கொண்டிருப்பார்கள். சிலர் உணவு அருந்திக் கொண்டே பேசிக் கொண்டிருப்பார்கள். இவர்கள் உண்மையாகவே உரையாடுகின்றார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஈடுபாட்டோடு உரையாடுவது என்பது அகமும் முகமும் இணைந்து இருக்கவேண்டும். அத்தகைய உரையாடலில் இனிமையான சொற்களைப் பயன்படுத்துவதுதான் அறம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

வேதாகமத்தில் குயவரின் கலன்களை சூளை பரிசோதிக்கின்றது. மனிதரை உரையாடல் பரிசோதிக்கின்றது. –சீராக்கின் ஞானம் 27:5. உரையாடல் வழியாக ஒரு மனிதரை நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். மேலும் உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்ப்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம்பெறட்டும் என்கிறது எபேசியர் 5:19. நம் உரையாடலுக்கு இனிமை சேர்த்து நம் அறப்பண்புகளை வெளிப்படுத்துவோம்.